இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 458 ● 1995 மார்ச் 17 வெள்ளிக்கிழமை

University of Jaffna
RECEIVED
Periodicals Division
Library

உள்ளே:

பக்கம்–2
மெக்சிக்கோ பெசோ நாணய நெருக்கடி உலக நிதிச் சந்தைகளைத் தாக்குவது நிச்சயம்

பக்கம்–3
அடடன் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்கள் முன்னோடி மகாநாடு

பக்கம்–4
பொலிஸ் தடுத்து வைத்துள்ள தோட்ட இளைஞரை விடுதலை செய்!

## தோட்டப்புற வேலைநீக்கம், அரசபயங்கரம், இனவாதகுண்டர் தாக்குதல்

# எதிர்த்துப் போராட புதிய புரட்சிகர தலைமை அவசியம்

தோட்டத் துறையை உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு விற்றுத் தள்ளும் பொருட்டு தோட்டத் தொழிலாளருக்கு எதிரான கேடுகெட்ட ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட பொதுஜன முன்னணி அரசாங்கம் தயாராகி வருகின்றது. ''பிரித்தானிய காலனித்துவ வாதிகள் இலங்கை மக்களுக்கு இழைத்த வரலாற்று அநியாயங்களை சரி செய்யும்'' மோசடியின் கீழேயே இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தில் இந்தப் பிற்போக்குத் திட்டம் அறிவிக்கப்பட்டதோடு இதற்கான திட்டத்தினை வரையும் ஆணைக்குழுவின் தலைவராக நிதிஅமைச்சின் செயலாளர் ஏ. எஸ். ஜயவர்தன நியமிக்கப்பட்டிருந்தார். ஏ. எஸ். ஜயவர்தன முதலாளித்துவ ''ஐலன்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இத்திட்டத்தினைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

தோட்டங்கள் 23 மாவட்ட கம்பனிகளுக்கு வழங்கப்படும். அப்படி வழங்கப்படும் தோட்டம் ஒன்றின் பெறுமதி 20 கோடி. 23 தோட்டங்களதும் பெறுமதி 460 கோடி ரூபாக்களாகும். பத்து ரூபா பங்குகள் 46 கோடிகளாகும். இந்தச் சகல பங்குகளும் கொழும்பு பங்கு முதல் சந்தையில் விற்பனை செய்யப்படும்.

தோட்டக் கம்பனிகளுக்கு 50 வீதப் பங்குகள் வழங்கப்படும். நூற்றுக்கு 30% பங்குகளை அரசாங்கம் கொண்டிருக்கும். எஞ்சிய 20 வீதப் பங்குகள் இலங்கையின் சகல குடும்பங்களுக்கும் இடையே — ஒரு கம்பனியில் ஒரு பங்கு என்ற விதத்தில் — பங்கிடப்படும். அவை ருஷ்யாவிலும் ருமேனியாவிலும் செய்ததைப் போல ''வவுச்சர்'' Voucher) முறையில வழங்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பயிற்சியில் நன்கு முறுக்கேறிய அலுகோசுவான ஏ. எஸ். ஜயவர்தன பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்தக் குண்டினை பின்வருமாறு விபரித்துள்ளார்: ''அரசாங்கம் பெருந்தோட்டத்துறையின் உள்ளே தொழிலாளர்களுடன் பந்தயம் பிடிக்கும் அதே வேளையில் இலங்கை மக்களுக்கு பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இழைக்கப்பட்ட காணி சுவீகரிப்பினால் ஏற்பட்ட வரலாற்று அநீதிக்கு நஷ்டஈடும் வழங்கப்போகின்றது.''

## விழிப்பாயிருங்கள்!

தினமும் உங்களின் சட்டைப் பைக்குள் உள்ளதையும் தட்டிப் பறித்துக் கொள்ளும் முதலாளிகளும் அவர்களின் அரசாங்கமும் ''வரலாற்று நீதியை வழங்குவது'' பற்றிப் பெரிதாகப் பேசிக் கொள்கிறார்கள். தொழிலாளர்களே, விவசாயிகளே, ஒடுக்கப்படும் மக்களே, விழிப்பாய் இருங்கள்! இந்த வங்குரோத்து முதலாளிகள் 'நீதி வழங்குவ' பேரிலும் பொது மக்களுக்கு ''பங்குகள் பிரித்துக் கொடுப்பதன்'' பேரிலும் மத்தியதர வர்க்க கும்பல்களை தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகத் தூண்டி விடப்பார்க்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் தமிழ்ப் பேசும் தொழிலாளர்களாக இருந்துவரும் ஒரு நிலைமையின் கீழ் அவர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டிவிடவே இந்த 'வவுச்சர்' மோசடியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இலங்கைப் பொது மக்களுக்கு ஏற்பட்ட ''வரலாற்று

(4ம் பக்கம் பார்க்க)




வேர்க்கஸ் லீக் உப செயலாளர் ஹெலன் ஹெல். யாட் டெட்ரோயிற் விமான நிலையத்தில் பேராசிரியர் றொகோவினை வரவேற்கிறார்.

## வடிம் றொகோவின் ஐக்கிய அமெரிக்க விரிவுரைக்கான சஞ்சாரம்

பழைய சோவியத் யூனியனுள் முன்னோடி மார்க்சிச வரலாற்று ஆசிரியரான பேராசிரியர் வடிம் றொகோ சில பல்கலைக் கழகங்களில் விரிவுரைகள் நிகழ்த்துவது உட்பட பல வேலைகள் நிமித்தம் ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார். ஸ்டாலினிச சர்வாதிகார எழுச்சிக்கு எதிராக போராட்டம் நடாத்திய ட்றொட்ஸ்கிவாதிகளான இடதுசாரி எதிர்ப்பு அணியினர் மற்றும் போக்குகளின் வரலாறு சம்பந்தமாக இவர் உரையாற்றுவார். அமெரிக்க ட்றொட்ஸ்கிவாதிகளான வேர்க்கஸ் லீக் இப்பயணத்தை ஏற்பாடு செய்திருந்தது.

## ''அமெரிக்காவின் குரல்'' யுத்த மையத்துக்கு எதிரான பு.க.க. போராட்டம்



மார்ச் 3ம் திகதி மாலைகொழும்பு அமெரிக்க தூதரகத்தின் எதிரில் 'அமெரிக்காவின் குரல்' மையத்துக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய பலம் வாய்ந்த மறியல் போராட்டத்தின் ஒரு கட்டம்



பெப்ரவரி 26 மாலை இரணவில 40 ஏக்கர் காலனியில்பு.க.க. நடாத்திய 'அமரிக்க குரல்' யுத்த மையத்துக்கு எதிரான பொதுக் கூட்டத்தின் பின்னர்—கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் பு. க. க. தோழர்களுடன்

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்சிக்கோ பெசோ நாணய நெருக்கடி உலக நிதிச் சந்தைகளைத் தாக்குவது நிச்சயம்

மெக்சிக்கோ நாணயமான பெசோவின் சரிவைத் தடுக்கும் ஒரு அனைத்துலகப் பிணையாக 20 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவதற்கான நிபந்தனையாக மெக்சிக்கன் மக்கள் மீதான பொருளாதாரத் தாக்குதலை உக்கிரமாக்கும்படி அமெரிக்க அரசாங்கமும் வோல் ஸ்ரீட் வங்கிகளும் கோரி வருகின்றன. பெப்ரவரி 21ம் திகதி அமெரிக்க திறைசேரி செயலாளர் றொபேர்ட் றூபினுக்கும் மெக்சிக்கன் நிதி அமைச்சர் கிலேர்மோ ஒட்டிசுக்கும் இடையே கைச்சாத்தான உடன்படிக்கையின் உள்ளடக்கம் இதுவே.

ஜனாதிபதி ஏர்னஸ்டோ செடில்லோவின் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய பதவிகளில் இருந்து விலகி அவற்றை வாஷிங்டனுக்கு விட்டுக் கொடுக்க இணங்கிக் கொண்டுள்ளது. அத்தோடு வெளிநாட்டுக் கடன்காரர்களுக்கு மெக்சிக்கன் தொழிலாளர்கள் இட்டுக் கட்டும் வீதத்தில் ஒரு வர்க்க யுத்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கவும் அது தீர்மானித்துள்ளது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் சடங்கு வாஷிங்டனில் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் மெக்சிக்கன் மத்திய வங்கி குறுங்கால வட்டி வீதத்தினை 50% வரை அதிகரித்துள்ளது. இந்த வட்டி வீத அதிகரிப்பு "மெக்சிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பேரம்பேசல்களில் ஏற்பட்டது" என அந்த வங்கியின் பேச்சாளர் ஒருவர் அறிவித்துள்ளார். இந்நடவடிக்கை மெக்சிக்கோ பண விநியோகத்தைக் குறைக்கவும் நாட்டின் கடன் மீண்டும் ஒரு முறை வெளிநாட்டு மூலதனத்துக்கான ஒரு கவர்ச்சியாக இருக்கும் விதத்திலுமே செய்யப்பட்டுள்ளது. இது பொருளாதார வளர்ச்சியின் குரல்வளையைத் துண்டாடுவதோடு வங்குரோத்தினதும் வேலைநீக்கங்களதும் புதிய அலைவீச்சுக்கும் இட்டுச் செல்லும்.

இந்த உடன்படிக்கையின் ஒரு பாகமாக செடில்லா அரசாங்கம் மெக்சிக்கன் அரச பெற்றோலியம் கம்பனியான பெமெக்சின் (PEMEX) எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் முழு வருமானமும் நியூயோர்கிலுள்ள பெடரல் றிசேர்வ் வங்கியூடாக நேரடியாக அனுப்பப்படவும் இணங்கியுள்ளது. இதனால் மெக்சிக்கோ கடன் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறும் எந்தவொரு கணத்திலும் வாஷிங்டன் மெக்சிக்கோவின் எண்ணெய் செல்வங்களைப் பறிமுதல் செய்து கொள்ள முடியும். வாஷிங்டனால் கோரப்பட்டுள்ள கடுமையான நிதி, நாணய கொள்கைகள் தூண்டிவிடக் கூடிய சமூகக் கிளர்ச்சிகளின் தாக்கம் காரணமாக உள்நாட்டு செலவினங்களை அதிகரிப்பதில் இருந்து மெக்சிக்கன் அரசாங்கத்தை தடைசெய்யும் நிபந்தனைக்கும் அது உடன்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

ஜனாதிபதி செடில்லோ எஞ்சியுள்ள அரசுடமை சொத்துக்களை வங்குரோத்து வீதத்தில் விற்றுத்தள்ளும் திட்டத்துடன் முன்னேறிக் கொண்டுள்ளார். விமானத் தளங்கள், துறைமுகங்கள் பெருந் தெருக்கள், புகையிரத சேவைகள், பெற்றே கெமிக்கல்ஸ், மின்சார நிலையங்கள் இந்த ஏலவிற்பனை பட்டியலில் இடம் பெறும். இது 1995ம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டப் பற்றாக் குறை மதிப்பீட்டின் அரைவாசித் தொகையை அடைக்கும் விதத்தில் 6 பில்லியன் டாலர்களைத் திரட்டும் ஒரு முயற்சியாக உள்ளது. கடந்த டிசம்பர் நடுப்பகுதியில் பெசோ நெருக்கடி மோசமடைந்ததைத் தொடர்ந்து பெரிதும் வளர்ச்சி கண்ட பொருளாதார வீழ்ச்சியை இந்நடவடிக்கைகள் மேலும் ஆழமாக்கும். மெக்சிக்கோ பத்திரிகைகளில் தினமும் பெரும் முதலீட்டுத் திட்டங்கள் ஒன்றில் இரத்துச் செய்யப்பட்டது அல்லது ஒத்திப்போடப்பட்டது பற்றிய செய்திகள் வெளிவந்துகொண்டுள்ளன. இதனால் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் வேலை இழப்பர்.

பெசோவின் பணமதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து டாலரின் மேலாதிக்கம் கொண்ட கடன் சேவைக் கட்டணங்களின் 60 வீத அதிகரிப்புக்கு மெக்சிக்கன் கம்பனிகள் முகம் கொடுத்துள்ளன. வட்டி வீதத்திலான பெரும் அதிகரிப்பு, அவற்றை நசுக்கித் தள்ளும் என பல எச்சரிக்கை செய்துள்ளன. உருக்கு தயாரிப்பு, உல்லாசப் பயண கைத்தொழில், கட்டிடவேலை, மெய் சொத்து வியாபாரங்களில் ஈடுபட்டுவந்த ஒரு பெரும் தொகுதிக் கம்பனியான குறுப்போ சிடெக் (Grupo Sidek) அதன் கடன்களை இட்டுக்கட்டத் தவறியுள்ளதோடு இன்னும் பலவும் இதே வழியில் பின்தொடரும் என எதிர்பார்க்கப் படுகின்றது. பெசோவின் நெருக்கடியில் மெக்சிக்கன் வங்கிகளின் வீழ்ச்சியின் நிழல் ஆடிக்கொண்டுள்ளதாக சில ஆய்வாளர்கள் முன்அனுமானித்துள்ளனர். நாட்டின் 18 பெரும் வங்கிகளில் குறைந்தது 8 வங்கிகள் வங்குரோத்தின் விழிம்பில் இருந்து கொண்டுள்ளன. இவை எல்லாமே வோல் ஸ்ரீட் நிதி நிறுவனங்களுக்கு பல பில்லியன் டாலர்களை கடனாக வழங்க வேண்டியுள்ளது.

மெக்சிக்கன் தொழிலாளர் வர்க்கம் நெருக்கடியின் சுமையைத் தாங்கும்படி நெருக்கப்பட்டு வருகின்றது. ஆளும் பீ.ஆர்.ஐ. கட்சியின் தொழிற்சங்க அமைப்பான மெக்சிக்கன் தொழிலாளர் சம்மேளனம் கடந்த இரு வருடங்களாக சம்பளத்தை நசுக்க அமுலில் இருந்துவந்த "சமூக உடன்படிக்கை"யை தொடர்ந்தும் திணிக்க முயற்சிக்கின்றது. பெசோவின் மதிப்பு அரைவாசியாகக் குறைக்கப் பட்டும் பணவீக்கம் வருடாந்தம் 45 வீத விகிதத்தினால் அதிகரித்தும் வரும் ஒரு நிலையில் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் சம்பள அதிகரிப்பை 7%க்கு குறைவாக அமுக்கி வைத்திருக்க முயற்சிக்கின்றன.

அமெரிக்காவினால் பிணை எடுப்பு உடன்படிக்கையின் ஒரு பாகமாகக் கோரப்பட்ட நடவடிக்கைகள் வெறுமனே பொருளாதார தன்மை மட்டும் கொண்டவை அல்ல. வறிய தென்பிராந்திய சியாபாசின் சப்பட்டிஸ்டா ஆயுதக் கிளர்ச்சிக்கு எதிராக பெப்ரவரி 9ம் திகதி செடில்லோ தொடுத்த இரத்தம் தோய்ந்த தாக்குதல் ஒன்றில் மெக்சிக்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் இடையேயான பூரண உடன்பாட்டின் ஒரு பாகமாக இடம்பெற்றது அல்லது வோல் ஸ்ரீட்டிலிருந்து கடன் கோரும் மெக்சிக்கோ கடனாளிகளின் அதிகரித்த கோரிக்கைகளால் கையாளப்பட்டிருக்க வேண்டும்.

பீ.ஆர்.ஐ. யின் (Institutional Revolutionary Party) தேசியவாத நடிப்புக்களின் மிச்சசொச்சங்களும் அது வாஷிங்டனுடன் செய்து கொண்ட இந்த உடன்படிக்கையுடன் சிதறடிக்கப்பட்டு விட்டன. 1938ல் தேசியமயமாக்கப்பட்டதில் இருந்து மெக்சிக்கன் தேசியவாதத்தின் ஒரு சின்னமாக விளங்கிய நாட்டின் எண்ணெய் வளமும் அமெரிக்க றிசேர்வ் பாங்கிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சியாபாசில் இடம்பெற்ற இராணுவ எதிர்த்தாக்குதலைப் பொறுத்த மட்டில் செடில்லோ அரசாங்கம் சப்பட்டிஸ்டா கெரில்லாக்களை நசுக்குவதிலோ அல்லது கைதுசெய்வதிலோ தோல்வி கண்டுள்ளது. மாறாக அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பைக் கிளறிவிட்டுள்ளது. தென்மாநில அரசில் இராணுவத்தை இறக்கியதைத் தொடர்ந்து கடந்த இரண்டு வாரங்களிலும் 100,000 அதிகமான மக்கள் தலைநகரில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.

"மெக்சிக்கோவை ஆபத்தில் இருந்து மீட்கும்" பேரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் தெற்குப்புற எல்லையில் ஒரு புரட்சிகர வெடிப்புக்கான ஒரு நிலைமையைச் சிருஷ்டிக்கின்றது. மேலும் இந்த நெருக்கடியை ரியோ கிரான்டேயுடன் நிறுத்திவிட முடியாது என பொருளியல் ஆய்வாளர்கள் கருதுவதோடு மெக்சிக்கோ பொருளாதார வீழ்ச்சி அமெரிக்காவின் உள்மட்டும் பல இலட்சம் வேலைகளை துடைத்து எறியும் விளைவுகளுக்கு இட்டுச் செல்லலாம் என அனுமானிக் கின்றனர். வங்கியாளர்கள் குறூப்-7 நாடுகளில் இரண்டான இத்தாலிக்கும் கனடாவுக்கும் எச்சரிக்கை அறிவித்தல் விடுத்துள்ளனர். அவற்றின் பிரமாண்டமான கடன்கள் நாணயங்களை மிகக் கீழ்மட்டத்துக்கு தள்ளப்போவதாக எச்சரித்துள்ளனர். வோல் ஸ்ரீட் கனடியன் டாலரை வடக்கின் பெசோ என அழைக்கத் தொடங்கியுள்ளது.

## அவுஸ்திரேலிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நியூசவுத்வேல்ஸ் தேர்தலில் சோசலிச வேலைத்திட்டத்துக்கு தலைமீடு!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியப் பகுதியான சோசலிஸ்ட் லேபர் லீக் (SLL) எதிர்வரும் நியூசவுத் வேல்ஸ் மாநிலத் தேர்தலில் நான்கு வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இந்த தேர்தல் தொடர்பாக எஸ்.எல்.எல். வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"எமது வேட்பாளர்கள் தொழிலாளர் வர்க்கத்துடன் கலந்துரையாடுவர். இலாப முறையை எதிர்ப்பர். முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் நாம் உலகம் பூராவும் உள்ள எமது வர்க்க சகோதரர்களுடனும் சகோதரிகளுடனும் சேர்ந்து அவுஸ்திரேலியத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதற்கு அவசியமான தலைமையைக் கட்டியெழுப்பப் போராடுகின்றோம். அத்தகைய ஒரு ஒன்றுபட்ட போராட்டத்தினால் மட்டுமே உலகை மீண்டும் ஆட்டிப்படைத்து வரும் வறுமை, பாசிசம், இனவாதம், யுத்தத்துக்கு முடிவு கட்ட முடியும். இலட்சோப லட்சம் தொழிலாளர்களும், இளைஞர்களும் உத்தியோகபூர்வமான அரசியலின் ஆதிக்கத்தில் ஆத்திரம் கண்டு வெறுப் படைந்துள்ளனர்.


ரெறி குக்


மைக் ஹெட்


யபு பில்யானா


டிரகன் கிரிஜக்

"ஆனால் ஆத்திரம் கொள்வது மட்டும் போதாது. இலாப முறையின் வரம்பினுள் சாத்தியமானது எனக் கணிக்கப்படுவதில் இருந்தன்றி தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியப்படுவது என்ன என்பதில் இருந்து தொடங்கும் ஒரு அரசியல் போராட்டத்தின் ஊடாக மட்டுமே தொழிலாளர்களின் உரிமையை உத்தரவாதம் செய்ய முடியும்.

"நியூ சவுத் வேல்ஸ் தேர்தலில் போட்டியிடும் சகல முதலாளித்துவக் கட்சிகளும் - லேபர், லிபரல், ஜனநாயகவாதிகள், கிறீன்ஸ் - புதிய பயங்கர வாழ்க்கைத்தர வெட்டுக்களைத் திணிப்பதில் சேர்ந்து கொள்ளும். தொழிலாளர் வர்க்கம் அதன் அரசியல் சுயாதீனத்தினை ஸ்தாபிதம் செய்வதற்கும் தொழிலாளர் வர்க்கத்தின் சகல பகுதியினரை ஐக்கியப் படுத்துவதற்கும் அதன் சொந்த அரசியல் கட்சியை கட்டியெழுப்புவதற்குமான காலம் வந்து விட்டது... சமுதாயத்தை தனியார் இலாபத்தின் அடிப்படையில் அன்றி மனித அவசியங்களை இட்டு நிரப்பும் விதத்தில் சமுதாயத்தினை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது." எனக் குறிப்பிடுகின்றது.

அனைத்து நாடுகளதும் தொழிலாளர்களையும் ஐக்கியப் படுத்து! சோசலிசக் கொள்கைகளுடனான தொழிலாளர் அரசாங்கம்! என்ற முக்கிய சுலோகங்களின் கீழ் பின்வரும் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்:

**ரெறி குக்** : வயது 52. *Workers News* பத்திரிகையின் கைத்தொழிற்றுறை செய்தி ஆசிரியர். எஸ்.எல்.எல். ஸ்தாபக அங்கத்தவரான இவர், செஸ்தோக் தொகுதியில் போட்டியிடுகின்றார். வடக்கு நிலக்கரி மாவட்டமான இங்கு பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**மைக் ஹெட்**: வயது 42. *Workers News* ஆசிரியர். இவர் கம்பல்ரவுணின் மேற்கு சிட்னியில் போட்டியிடுகின்றார். இங்கு இளம் தொழிலாளர் குடும்பங்கள் வட்டிவீத அதிகரிப்பினாலும் சமூக சேவையின் பற்றாக் குறையினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**யபு பில்யானா**: வயது 50. தபால் ஊழியரான இவர் ஒரு ஆதிவாசி. இவர் சிட்னியில் ஹெப்போர்ண் தொகுதியில் போட்டியிடுகின்றார். இந்தப் பிராந்தியத்தில் தொழிலாளர்கள் பெரும் பக்டரிகளின் "மறுசீரமைப்பு" நடவடிக்கையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**டிரகன் கிரிஜக்**: 30 வயதான இவர் ஒரு யூகோசலாவிய தொழிலாளி. உருக்கு, சுரங்க, ஆடை கைத்தொழில்களை கொண்ட வொலொங்கொங் தொகுதியில் இவர் போட்டியிடுகின்றார். இக் கைத்தொழில்களில் பல்லாயிரக் கணக்கானோர் ஏற்கனவே வேலை இழந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டன்: தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் முன்னோடி மாநாடு:

# ''யூ.என்.பி. அரசாங்கம் ஆட்சியில் தொடர்ந்திருக்க முடியாத நிலைமை சிருஷ்டிக்கப்பட்டதாலேயே கவிழ்ந்தது''

**மார்ச் 19ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் மகாநாட்டுக்கான தயாரிப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அது வெளியிட்டுள்ள அரசியல் முன்னோக்கின் அடிப்படையில் நாடு பூராவும் முன்னோடி மாநாடுகளை நடாத்தி வருகின்றது. அதன் ஒரு அங்கமாக அட்டனில் பெப்ரவரி 19ல் இடம் பெற்ற மாநாட்டு அறிக்கை.**

மார்ச் 19ம் திகதி நடைபெற உள்ள தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களின் மகாநாட்டுக்கான தயாரிப்புக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னோடி மகாநாடுகளை நடாத்தி வருகின்றது. இதன் முதலாவது மகாநாடு அட்டன் நகரசபை மண்டபத்தில் பெப்ரவரி 19ல் நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்கு இருபது பேர் வருகை தந்திருந்தனர். அவர்களில் அநேகர் தொழிற்சாலை மூடப்பட்டு வேலை இழந்துள்ள பிரவுன்ஸ் இன்ஜினியரிங் கம்பனி ஊழியரானவர் தோட்டத் தொழிலாளரும் இம் முன்னோடி மகாநாட்டுக்கு வருகை தந்திருந்னர்,

மார்ச் 19 மகாநாட்டையொட்டி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல்குழு வெளியிட்டுள்ள ''தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான புதிய முன்னோக்கையும் தலைமையையும் கட்டியெழுப்பு'' என்ற அறிக்கையே இம் மகாநாட்டில் கலந்துரையாடப்பட்டது, இந்த முன்னோடி மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய அறிக்கை தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது, அறிக்கையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்ற சமயத்தில், பிரவுன்ஸ் கம்பனியினைச் சேர்ந்த அகில இலங்கை வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கக் கிளைச் செயலாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நட்டத்தில் இயங்குவதாக கூறி கம்பனியை மூடி எம்மை வெளியேற்றியுள்ளனர். நாம் பல்வேறு பிரச்சாரங்களில் ஈடுபட்டோம். கொழும்பில் தயார் செய்யப்பட்ட நடைபவனி, உண்ணாவிரதப் போராட்டங்களிலும் பங்குபற்றினோம், அவற்றால் எந்தவொரு பலனும் கிட்டவில்லை. எந்தவொரு தலைமையும் எம்மைக் கவனிக்கவில்லை. எமது நம்பிக்கை சிதறுண்டுள்ளது. இந்த தோழர்கள் முன்வைத்துள்ள வேலைத் திட்டம் தான் சரியான வேலைத்திட்டமாகும். நாம் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தோம். இதனை ஆட்சிக்குக் கொண்டுவர வேலை பார்த்தோம். எமது பிரச்சினைகள் தீர்க்கப்படுமென நினைத்தோம். எனினும் நடந்துள்ளதோ எதிர்மாறானது. யூ.என்.பி, அரசாங்கம் இருந்திருப்பின் பிரச்சினை தீர்ந்திருக்க இடமிருந்திருக்கும்.

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சமர்ப்பித்துள்ள வேலைக திட்டம் சரியானதே. எனினும் முன்னர் சில சமயங்களில் எமது தொழிற் சங்கத் தலைமைகளும் இவ்வாறு விரிவுரை நிகழ்த்தியுள்ளனர். நாம் இதில் நம்பிக்கை கொள்ள சிந்திக்க வேண்டும். பிரவுன்ஸ் கம்பனி ஊழியர்களுககு தமது பிரச்சனை குறித்து தூரித வேலைத் திட்டம் ஒன்றை முன்வைப்பதே சாலச் சிறந்தது.''

அரசியல் அறிக்கையை முன்வைத்துப் பேசிய பு.கக மத்திய குழு உறுப்பினர் கே. ரத்னாயக்க, பிரவுன்ஸ் தொழிற்சங்கப் பிரதிநிதியின் கருத்துக்கு பின்வருமாறு பதிலளித்தார்:

''யூ என்.பி அரசாங்கம் இருந்திருடபின் பிரச்சினை தீர்க்கபபட்டிருக்கும்'' என்ற பேச்சு படுபிற்போக்குக்கு சேவையாற்றும் கருத்தாகும். யூ,என்.பி. அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க முடியாத நிபந்தனை சிருஷ்டிக்கப்பட்ட நிலைமையில் தான் அரசாங்கம் கவிழ்ந்தது ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை முதலாளிகளுடன் சேர்ந்து துரோகத் தலைமைகளது அனுசரணையுடன் பொதுஜன முன்னணியை ஆட்சிபீடம் ஏற்றினர். தொழிலாளர் — ஒடுக்கப்பட்ட மக்களை ஒடுக்கி இராணுவ சர்வாதிகாரத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான தயாரிப்பு இடம்பெற வேண்டும் என்ற தீர்மானத்துடனேயே'' என்றார்.

சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ, இ. தொ. கா, மலையக மக்கள் முன்னணி. ஏனைய தொழிற் சங்க தலைமைகளும் யூ. என், பி அகற்றப்பட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என மக்களிடம் வற்புறுத்தின. எந்தவொரு முதலாளித்துவ அரசாங்கம் ஆட்சியில் ஏறினும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு ஏற்படப் போகும் ஆபத்தைக் குறித்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே எச்சரிக்கை செய்தது. முதலாளித்துவ முகாம்களுக்குள் தள்ளப்பட்டுள்ள பழைய தொழிலாளர் அமைப்புக்களிடமிருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாகி தொழிலாளர் அமைப்பு ரீதியில் இயங்க வேண்டும் என்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டியது.

தற்போது சில தொழிற் சங்கத் தலைமைகள் மீண்டும் யூ. என் பி. க்கு வால் பிடிக்க முன்வந்துள்ளன. டெலிகொம், மற்றும் தனியார்மயமாக்கலுக்கு முகம் கொடுக்கும் அரசாங்க நிறுவன தொழிற் சங்கங்கள், ஒரு புறத்தில் தாம் இதற்கு எதிரானவர்கள் எனக் காட்டும் சுவரொட்டிகளில் ''அவர்களை வென்றவர்கள் இவர்கள்'' என எழுதுகிறார்கள். மறுபுறத்தில் தனியார்மயமாக்கல் அரசாங்கத்தின் வேலை அல்ல எனக் கூறுகிறார்கள்.



நாட்டின் முன்னணி இஞ்சினியரிங் கம்பனியான பிரவுன்ஸ் கம்பனி மூடப்பட்டதைத் தொடர்ந்து வேலை இழந்துள்ள அட்டன் பிரவுன்ஸ் கிளை தொழிலாளர்கள் அந் நிறுவனத்தின் எதிரே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளரை திசைதிருப்ப முயல்கின்றனர் என பு.க,க. பேச்சாளர் குறிப்பிட்டார். இதன் மூலம் தொழிற் சங்க தலைமைகளின் படுகேவலமான வலதுசாரிப் போக்கு அம்பலமாகின்றது. பொதுஜன முன்னணி, யூ.என்,பி, பாசிச சக்தியுடன் கூட்டுச் சேர தொழிற் சங்கத் தலைமைகள் இன்று நடைபோடுவதை காணலாம். தொழிற் சங்கங்களது வலதுசாரிப் போக்கை தெளிவுபடுத்திய ரத்னாயக்க தொழிலாளர் போராட்டத்தை முதலாளித்துவத்திடமிருந்து சுயாதீனம் அடையச் செய்ய நடவடிக்கைக் குழுக்களை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தினார்,

மார்க்சிசத் தலைமையினதும் அது முன்வைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர வேலைத் திட்டத்தினதும் அவசியம் துலாம்பரமாகி உள்ள ஒரு நிலையில் தொழிலாளரை அதிலிருந்தும் அப்புறப்படுத்தும் மற்றுமோர் படுபிற்போக்கு முயற்சியே இது என பு. க. க பேச்சாளர் சுட்டிக்காட்டினார். யதார்த்தமான உண்மை இது அல்லவா? பு. க. க மகாநாட்டுக்காக சமர்ப்பித்த அறிக்கையை எடுத்துக் காட்டாக கொள்ளுங்கள். இலங்கைக்குள் தொழிலாளர் தமது உரிமைகளுக்காக மிகப் பலம்வாய்ந்த முறையில் போராடியது நான்காம் அகிலத்தின் கிளையான இந்திய போல்ஷிவிக்–லெனினிஸ்ட் கட்சி தலைமை கொடுத்த சமயத்திலேயே எனவும், தொழிலாள – ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தலைமை வழங்கிய புரட்சிகர அரசியல் சக்தியாக அது போராடியது என்பது ஒரு வரலாற்று உண்மையாகும் எனவும் அவர் கூறினார் இன்று பு.க.க அதன் மரபுரிமையைப் பிரதிநிதித்துவம் செய்து முன்வைத்துள்ள வேலைத் திட்டம் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுத் தேவையை நிறைவேற்றத்தக்க ஒரே ஒரு வேலைத் திட்டமாகும் என்பது தொழிலாளர் போராட்டங்களுள் தெளிவாகியுள்ளது.

மகாநாட்டின் இறுதியில் பு.க.க பேச்சாளரை சந்தித்த பல ஊழியர்கள், தாம் மார்ச் 19ம் திகதிய மகாநாட்டில் பங்குபற்றுவதாயும் பிரவுன்ஸ் தொழிலாளரின் நடவடிக்கைக் குழு ஒன்றைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர். ஒரு பிரவுன்ஸ் கம்பனி ஊழியர், ''ஏனைய தலைமைகள் எம்மைக் கைவிட்டுச் சென்றாலும் கூட பு. க. க தொடர்ந்து பிரவுன்ஸ் போராட்டம் பற்றிச் செயற்படுவது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திடம் தாம் காணும் ஒரு சிறப்பு அம்சமாகும்'' எனக் கூறினார்.

பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்:

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை– ரூபா 20

சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ....................................................

முகவரி: ....................................................

....................................................

....................................................

தொழில்: ....................................................

தொலை பேசி இல: ..........................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:
தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிசில் தடுத்து வைத்துள்ள தொழிலாளரை விடுதலை செய்!

தோட்டத் தொழிலாளருக்கு எதிரான அரச அடக்குமுறை உக்கிரமாக்கப்பட்டுள்ளது. விசேடமாக நுவரேலிய மாவட்ட இரகசியப் பொலிசார் இளம் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக ஏவிவிடப்பட்டுள்ளனர், 1994 அக்டோபர் மாதத்தில் இருந்து இம் மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 160. இவர்களில் 38 பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உடபுசலாவ பொலிசில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இங்ஙனம் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் சாந்திகுமாராவார். அவர் ஹட்டன் கிளினிக்சல் ஒப் ஹோமியோபதி வைத்தியர். பொலிசார் நவம்பர் 11ல் அவரைக் கைது செய்தனர். அனேகமாக இளைஞர்கள் தோட்டங்களில் ''கேரோ'' செய்தார்கள் என்ற காரணத்துக்காகவே கைது செய்யப்படுகின்றனர். இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளது என்ற பிரச்சாரத்தின் அடிப்படையில் பொலிசார் தோட்டத்துறையில் அரச வேட்டையை முன்னெடுத்து செல்கின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிசின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

தொழிற் சங்கத் தலைமைகள் இக் கைது செய்தலுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை; அத்தோடு தொழிலாளர்களுக்கு எதிராக பொலிசை ஏவிவிட வேலை செய்கின்றார்கள்.

யூ என்.பி அரசாங்கத்தின் அரச வேட்டையை தோட்டப்பகுதியில் ஏவிவிட முன்நின்றவர்கள் இ.தொ.கா தலைவர்களான எஸ்.தொண்டமானும் எம்.எஸ், செல்லச்சாமியுமாவார்கள், யூ என்.பி அரசாங்கத்திற்கும் இ.தொ.கா.விற்கும் எதிரான தோட்டத் தொழிலாளரின் எதிர்ப்பு அதிகரிக்க இந்த அரசாங்க ஒடுக்குமுறை ஒரு காரணமாகும். பீ.சந்திரசேகரன் இ.தொ.கா.விலிருந்து பிரிந்து மலையக மக்கள் முன்னணியை நிறுவி ஓர் முகமூடியை போட்டுக் கொண்டார். அரச வேட்டைக்கு தாம் எதிர்ப்பு எனக் காட்டிக்கொண்டார். அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு உண்டு என்ற அரசாங்க குற்றச் சாட்டின் பேரில் ஒரு வருடத்துக்கும் அதிகமாக சிறையிலிடப்பட்டார், இவ் வேட்டையை ஏவிவிட்டதும் இ.தொ.கா தலைமையேயாகும்.

தற்போதைய கைது செய்தல்களை தொழிலாளர்கள் பீ.சந்திரசேகரனுக்கு அறிவித்தபோது அவர் 'விடுதலைப் புலிகளுடன் தொடர்பு' சம்பந்தமான பொலிசின் குற்றச்சாட்டைச் சுட்டிக்காட்டி தலையிட மறுத்தார். சந்திரசேகரனும் இளைஞர்களின் பட்டியலை பொலிசுக்கு வழங்க வேலை செய்ததாக தமக்குச் சந்தேகம் உள்ளதென சில தொழிலாளர்கள் கூறினார்கள். தோட்டத் தொழிலாளருக்கு எதிராக இனவாதத்தை தூண்டி அரச வேட்டையை நடாத்த வேண்டிய தேவை பொது ஜன முன்னணி அரசாங்கத்துக்கு உள்ளது.

இராகலை, மாத்தளை போன்ற பகுதிகளில் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக நிலம் இல்லாத விவசாயிகளை தூண்டிவிட பொது ஜன முன்னணி அரசாங்கம் திட்டமிட்டு செயல்படுவதாக தெரியவருகின்றது.

அரசாங்கம் இயங்குவது தோட்டங்களை தனியார்மயமாக்கவேயாகும். யூ.என்.பி அரசாங்கம் தோட்ட நிர்வாகத்தை 5 வருடத்துக்கு தனியார் மயப்படுத்தியதோடு அதை மேலும் தொடர முடியாமல் போனதற்கு தொழிலாளரின் எதிர்ப்பே காரணம்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி மற்றும் தோட்ட தொழிற் சங்கங்களை தன் கைக்குள் போட்டுக் கொண்டு தொழிலாளரை அடக்கவும் தனியார்மயப்படுத்தவும் திட்டம் தீட்டுகின்றது. தோட்ட பகுதியில் தற்போது ஏவிவிடப்பட்டுள்ள ஒடுக்குமுறை இப் பிற்போக்கு திட்டத்தின் ஓர் அம்சமாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் தனியார் மயப்படுத்தலுக்கும் அதற்கு உபயோகப்படும் அரச வேட்டைக்கும் எதிராக போராட்டத்தை ஆயத்தப்படுத்த முன்வரவேண்டும். கைது செய்யப்பட்டுள்ள சகல இளைஞர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யும் பிரச்சாரத்தை தோட்டப் பகுதியிலும் அனைத்து தொழிலாளர் மத்தியிலும் முன்னெடுக்கும்படி வர்க்க நனவுள்ள தொழிலாளரை வேண்டுகின்றோம்.

# தோட்டப்புற வேலை நீக்கம், ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அநீதிக்கு நஷ்டஈடு வழங்கும்'' பச்சைப் பொய்யை பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது நிர்வாணக் கோலத்தை மூடி மறைக்கப் பாவித்துள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்பட்ட அநீதிக்கு இலங்கை முதலாளிகள் நஷ்டஈடு வழங்கப் போகிறார்கள்! அதுவும் பிரித்தானியர் காலத்தில் இருந்தே காலனித்துவ ஆட்சியாளர்களின் காலடிகளை நக்கி வந்த இலங்கையின் கேவலம் முதலாளிகள்!

கடந்த கொலைகார யூ.என்.பி. அரசாங்கத்தினால் ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் செய்யமுடியாது போனதை செய்து முடிக்க சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. பிரித்தானியகாலனித்துவவாதிகளால் ஏற்பட்ட அநீதிக்கு நஷ்டஈடு வழங்குவது பற்றி ஏ.எஸ். ஜயவர்த்தன பேசிய அதே நாளில் — பெப்ரவரி 13 — கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மகாநாட்டில் பேசிய ஜனாதிபதி தோட்டத்துறையில் செய்யும் முதலீட்டின் இலாபங்களை சுட்டிக்காட்டினார். அந்த விதத்தில் அவர் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் காலனித்துவ சுரண்டல்களுக்கான நிலைமைகளை தயார் செய்துள்ளார்.

பொது மக்களுக்கு வழங்கப்படும் பங்குகளின் உரிமை கைமாறக் கூடியதாக இருப்பதால் இறுதியில் அவற்றை முதலீடு செய்யும் முதலீட்டாளர்களே விலைக்கு வாங்கிக்கொள்ளமுடியும் எனவும் ஏ.எஸ்,ஜயவர்த்தன மேலும் சுட்டிக் காட்டினார். மக்களுக்கு விற்பனை செய்யும் பங்குகள் இரு பக்கமும் கூரிய முனைகளைக் கொண்ட கத்திகளாகும் என்பதை இது தெளிவு படுத்துகின்றது, ஒரு புறத்தில் மத்தியதர வர்க்க கும்பல்களின் கண்களில் மண்ண வீசி அவர்களை தொழிலாளர்களுக்கு எதிராக தூண்டிவிடுகின்றார்கள். மறுபுறத்தில் முதலாளிகளின் கைகளுக்கு பங்குகளை தட்டிப் பறிக்கும் நடவடிக்கையாக அதை நடைமுறைக்கிடுகின்றார்கள். ரூஷ்யாவிலும் ரூமேனியாவிலும் அரசாங்க உடமையாக இருந்த கைத்தொழில்களையும், நிறுவனங்களையும் இழுத்து மூடி, அவற்றை முதலாளிகளின் கரங்களுள் தள்ளிவிடவும் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளுக்குத் தாக்குதல் நடாத்தவும் சர்வதேச நாணய நிதியம் இதே விதிமுறையைக் கையாண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த விதிமுறையை துரிதப்படுத்துவதன் அவசியத்தினை வலியுறுத்திய பொது ஜனமுன்னணி வரவுசெலவுத் திட்டம் பின்வருமாறு கூறுகின்றது:

''...அத்தோடு அரசாங்கமும் மக்களும் இந்தத் துறைக்கு உதவிமானியம் வழங்கும் சுமையில் இருந்து விடுவிக்க அந்தத் தோட்டங்களை இலாபமான முறையில் நிர்வகிக்கும் பொறுப்பு தனிப்பட்ட கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். 50 ஆண்டுகளுக்கும் வரிசெலுத்துவதற்கும் உட்பட்டு இந்தத் தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடுவதன் மூலம் எமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.''



சந்திரிகா குமாரதுங்க

தோட்டங்களை தனியார்மயமாக்கும் நடவடிக்கைக்கு எதிராக எதிர்ப்புக் கிளம்பும். அச்சமயத்தில் தொழிலாளர்களை பொது மக்கள் பங்கு கொள்வனவு செய்வதற்கு எதிரானவர்களாகக் காட்டவும் அவர்களுக்கு எதிராக பொதுஜன அபிப்பிராயத்தைத் தூண்டிவிடவும் முடியும் என அரசாங்கம் கணக்குப் போட்டுள்ளது. பொது ஜன முன்னணி அரசாங்கத்தின் பிற்போக்குத் திட்டமிடுவோரின் எதிர்பார்ப்பு மக்களுக்கு ''இல்லாதுபோன உரிமைகளை'' பெற்றுக் கொடுப்பது அல்ல; தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் ஆளுக்காள் மோதிக் கொள்ளும் நிலைமையை உருவாக்குவதே,

''தேசி...
காக்க''
பங்குகளி...
வீதத்தினை...
வைத்திரு...
பட்டுள்ள...
முதலாளி...
த்தை செ...
சிய 20 வி...
க்கு பகி...



எஸ்,...

இந்த வித...
ட்ட பின்...
அரசாங்க...
எஞ்...
மக்களின்...
வீசும் பெ...
தான் ...
கூறிக்கொ...
பங்குகளை...
லாளிகளுக்...
ஆனால் ...
களில் 3...
அல்ல 10...
இருந்து ...
தமக்கு
கிடையா...
ந்த காலத்...
ர்கள் அனு...
டதில்லை...

பொது...
சாங்கத்தி...

## பதுளை – எலிதலுவத்த
# 2நிமிட தாமதத்துக்காக வேலை வழங்க மறுப்பு!

கடந்த பெப்ரவரி 20ம் திகதி பதுளை எலதலுவத்த தோட்டத் தொழிலாளர்கள் 2 நிமிடங்கள் வேலைக்கு தாமதம் ஆகியதற்காக தோட்ட நிர்வாகம் அவர்களுக்கு வேலை வழங்க மறுத்து பயமுறுத்தியுள்ளது. நிர்வாகத்தின இந்த ஆத்திரமூட்டலுக்கு எதிராக 600 தொழிலாளர்கள் உடனடியாக வேலைநிறுத்தம் செய்தனர். மறுநாள் தொழில் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் இத் தோட்ட நிர்வாகி சம்பந்தமாக இத்தகைய முறைப்பாடுகள் இதற்கு முன்னரும் கிடைத்துள்ளதால் அவருக்கு மன்னிப்பு வழங்கும்படி வேண்டிக்கொண்டனர். சீ.பீ.டபிள்யூ தொழிற்சங்கத் தலைமை அரசாங்க அதிகாரியின் வேண்டுகோளுக்கு ஆதரவு வழங்கியது. வேலை நிறுத்தத்தை முன்னெடுத்துச் சென்றால் சீவியம் கஷ்டமாகும். ஆதலால் போராட்டத்தை நிறுத்துமாறு பணித்தார், ஆனால் தொழிலாளர்கள் இதற்கு அடிபணிய மறுத்தனர்.

இந் நிர்வாகி தம்மை தொடர்ந்து பயமுறுத்தி வருவதால் அவரை இடமாற்றம் செய்யுமாறு தொழிலாளர் வேண்டினார்கள். கொழுந்து பறித்தலில் செய்துள்ள புதிய மாற்றங்கள் காரணமாக ஓர் தொழிலாளியின் வேலை நேரம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. ஆதலால் இக் கொடூரமான புதிய சுரண்டல் முறையை நீக்கவேண்டுமென தொழிலாளர்கள் வேண்டினார்கள். அத்தோடு சமயாசமய ஊழியர்களின் நிரந்தரம், வாரத்திற்கு ஆறு நாள் வேலை ஆகிய கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். 'மல்வத்த பிளான்டேசன்' கம்பனியின் தொழிலாளர்களை வெளியில் இருந்து கொணர்ந்து சமயாசமய தொழிலாளரின் வேலை வாய்ப்பை ஒழித்தல் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தொழிலாளர் கோரியுள்ளனர்.

## பண்டாரவளை–அம்பிட்டி...
# 1500 தொழிலாளர்...

பண்டாரவளை–அம்பிட்டிகந்த தோட்டத்தின் 1500 தொழிலாளர்கள் ஐந்து நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர், தற்போது நடைமுறையிலுள்ள 3–4 நாட்கள் கொண்ட வேலையை வாரத்தில் 6 நாட்களாக உயர்த்துவதும், சமயாசமயத் தொழிலாளரை நிரந்தரமாக்குவது வீட்டுவசதியும் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாகும்.

கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து இக்கோரிக்கைகளை முன் வைத்திருந்தாலும் நிர்வாகம் ஒரு பதிலும் தரவில்லை. அம்பிட்டிகந்த தொழிலாளர் மத்தியில் பாய்ந்த இ.தொ.கா CNWC தொழிற் சங்கம் தேசிய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து தொழிலாளரின் கோரிக்கைகளை சாக்கடையில் தள்ள நிர்வாகத்துடன் இணைந்தன. கடந்த பெப்ரவரி 13ம் திகதி பறித்த கொழுந்தை நிர்வாகத்திற்கு கொடுக்க மறுத்த தொழிலாளர்கள் உடனடியாக பதில் வேண்டுமென வற்புறுத்தினார்கள்.

நிர்வாக...
ழிலாளருக்...
வில்லை.
பொலிசா...
துக்கு அ...
ளரை மிரட...
தொழிற்ச...
வர்களை ...
த்துப்
இ.தொ.கா...
தலைவர்க...
ட்டத்தை ...
நிர்வாகம்...
ழில் நீதிம...
சங்கத் த...
கிகள் எடு...
நியாயமா...
கப்பட்டது...
திகதி ...
நீதிமன்றத்...
நடத்த ...
னார்கள்.
ளரின் கோ...
தமாக பே...
த்த எதுவி...
லாமல் ...
அகற்றியது...
ப்புவழங்கு...
ள்ளதாக ...

செல்லச்...
டமானும்...
தையும்...

# …கம், அரச பயங்கரம், இனவாத குண்டர்...

''தேசிய நலன்களைக் காக்க'' தோட்டத்துறை பங்குகளில் நூற்றுக்கு 30 வீதத்தினை அரசாங்கம் வைத்திருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. தனிப்பட்ட முதலாளிகள் நூற்றுக்கு 50% த்தை கொண்டிருப்பர். எஞ்சிய 20 வீதம் பொது மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும்.



எஸ்,தொண்டமான்

இந்த விதத்தில் பங்கிடப்பட்ட பின்பு தோட்டங்களில் அரசாங்கத்தின் நிர்வாகம் எஞ்சு… எப்படி? பொது மக்களின் கண்களில் மண் வீசும் பொருட்டு அரசாங்கம் தான் கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் 30 வீதப் பங்குகளையும் பின்னர் முதலாளிகளுக்கு விற்றுத்தள்ளும் ஆனால் அரசாங்கத்தின் கைகளில் 30 வீதப் பங்குகள் அல்ல 100 வீதப் பங்குகள் இருந்து வந்த காலத்திலும் தமக்கு ஏற்பட்ட நலன் கிடையாது என்பதை கடந்த காலத்தில் தொழிலாளர்கள் அனுபவம் மூலம் கண்டதில்லையா?

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தலை நியாயப்படுத்தும் பொருட்டு பிரதி நிதி அமைச்சர் அத்துறையில் குவிந்து போயுள்ள நெருக்கடி பற்றிய ஒரு பட்டியலை முன் வைத்துள்ளார். ஆனால் இது அந்த நெருக்கடியில் இருந்து தலையெடுக்கும் பெயரில் தொழிலாளர்களின் மேல் எவ்வளவு போசமான தாக்குதல் இடம்பெறப்போகின்றது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது:

''இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் இத்துறையின் உற்பத்தித்திறன் மிகவும் கீழ் மட்டத்தில் உள்ளது. இந்தப் பயிர்களின் அனைத்துலக விலை மட்டம் வீழ்ச்சி கண்டிருக்கையில் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதால் தோட்டத்துறையின் இலாபகரமான வாழ்க்கை இல்லாமல் போய் விடுகிறது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தோட்டத்துறையின் நஷ்டங்களை அடைக்க கடன் வழங்குவதில் வங்கிகள் ஈடுபட்டன. அந்த வங்கிகள் முகம் கொடுத்த நிதி நெருக்கடிகளில் இருந்து விடுவிக்க பொது மக்களின் ரூபா 600 கோடி வழங்க நேரிட்டது.''

சகல நாடுகளைக் காட்டிலும் கீழ் மட்டத்தில் உள்ள உற்பத்தித் திறனை அம் மட்டங்களுக்கு உயர்த்துதல் பற்றி அரசு பேசிக்கொள்கிறது. இதன் அர்த்தம் என்ன தெரியுமா? நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இன்று பயன்படுத்தப்பட்டு வரும் தொழிலாளர்களின் வுண்ணிக்கையை குறைக்க எம் எஞ்சி உள்ளோரின் வேலையை துரிதப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்துலக விலை மட்டம் வீழ்ச்சி காணும் நிலைமையில் சம்பள மட்டங்களை அதிகரிப்பது தோட்டங்களின் இயக்கத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தோட்டங்களின் இயக்கத்துக்கு ஏற்ற விதத்தில் சம்பள மட்டங்களை வெட்டித் தள்ளவும் திட்டமிட்டுக் கொண்டுள்ளது.

1976ல உற்பத்திச் செலவில் நூற்றுக்கு 4 வீதமாக இருந்த உழைப்புச் செலவு 1992ல நூற்றுக்கு 68 வீதமாக அதிகரித்து உள்ள நிலையில் அதைக் குறைக்க எடுக்கப்படும் முயற்சியானது, தோட்டங்களில் தொழிலாளர் எண்ணிக்கையை குறைத்தல் எஞ்சியுள்ள அற்ப சொற்ப நலன்புரி சேவைகளை வெட்டித் தள்ளுதல் எஞ்சியிருக்கும் தொழிலாளர்களிடம் அதிக அளவில் வேலை வாங்குதல் என்பவற்றைக் குறிக்கின்றது.

ஜனாதிபதி பிரேமதாச அரசாங்கம் 1992ல் தோட்டத்துறையை உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு 5 ஆண்டுக் குத்தகைக்கு கொடுத்தது. தோட்டத் தனியார்மயமாக்கத்துக்கு எதிராக தொழிலாளர்களிடையே கடும் எதிர்ப்பு ஏற்பட்டதாலேயே பிரேமதாச அரசாங்கம் இந்த இளகிய நடவடிக்கையை மேற்கொண்டது. அன்று பிரேமதாச அரசாங்கத்தின் அமைச்சர் பதவி மூலம் இலஞ்சம் பெற்றுக்கொண்ட இ.தொ.கா.வின் எஸ்.தொண்டமான் எம் எஸ். செல்லச்சாமி தனியார்மயமாக்கத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு கிடைக்கப்போகும் நலன்களைப் பற்றி அளந்த கதைகள் தொழிலாளர்களுக்கு இன்னமும் நினைவில் உள்ளது.

தோட்டக் கம்பனிகள் 'நஷ்டம்' காட்டி திறைசேரியில் இருந்து பொதுமக்களின் கோடிக்கணக்கான பணத்தை சூறையாடிக் கொண்ட வேளையில் தொழிலாளர்கள் மிலேச்ச நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. யூ.என்.பி அரசாங்கம் கம்பனிக்காரர்களின் வேண்டுகோளின பேரில் குத்தகையை 40 வருடங்களுக்கு நீடித்த போதிலும் அது தொழிலாளர்களின பலத்த எதிர்ப்பினால் ஒத்திப் போடப்பட்டுள்ளது. ஆனால் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கம் அதையே அமுல்செய்யப்போகின்றது, பாராளுமன்றத்தில் யூ.என்.பி காரர்களின கரகோசங்களுக்கு மத்தியில் சபந்தப்பட்ட ''புதிய வேலைத்திட்டத்தின்'' கீழ் தொழிலாளர்களின் மேல் பெரும் நாசம் திணிக்கப்பட உள்ளது.

இலங்கையின் தேயிலை உற்பத்தி தொழில் 127 ஆண்டுகள் பழமையானது. உற்பத்திக்காகக் கையாளப்படும் முறைகளும் பழமையானவை. இன்று முதலாளித்துவ கம்பனிகள் ஏனைய தேயிலை உற்பத்தி நாடுகளின் முதலாளிகளுடன் போட்டியிடும் விதத்தில் 'சீடீசி' (Cut - Tare - Curl) உற்பத்தி முறைக்கு மாறக உள்ளன இதற்காக பெரிதும் முன்னேற்றமானதும், தன்னியக்கமும் கொண்ட இயந்திரங்களை பயனபடுத்துகின்றார்கள். இந்த முறையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை 'தரத்தில் உயர்ந்தது' எனக் கூறப்படுவதோடு பழைய 1 கிலோ தேயிலையில் இருந்து தயார் செய்யப்படும் தேநீரைக் காட்டிலும் நான்கு ஐந்து மடங்கு தேநீர் தயார் செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. இந்த உற்பதி முறையின் தாக்கம் என்ன? இம்முறை மெட்ரோபொலிட்டன் கம்பனிக்குச் சொந்தமான கொட்டியாகலையில் கையாளப்படுகின்றது சீடீசி தேயிலை உற்பத்தி இயந்திரத்துக்குப் போதுமான அளவிலான தேயிலை கொழுந்துகளை பொகவந்தலாவ, டிக்சின், நோர்வூட், கொட்டியாகல மற்றும வனராஜா கம்பனிகளுக்குச் சொந்தமான ஓபேக்ஸ் தோட்டங்களில் இருந்தும் சேகரிக்கிறார்கள். இதுவும் பற்றாக்குறையானதென கூறப்படுகின்றது. தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இந்த நவீன உற்பத்தி முறை பெருவாரியான தொழிலாளர்களை உற்பத்தி முறையில் இருந்து வெளியே தள்ளுவதாக உள்ளது.

தோட்டத்துறை நெருக்கடி பற்றிய அரசாங்கத்தின் ஆணைக்குழுவின் தலைவரான கலாநிதி ஜே.பி.கலேகம 1994 ஜூலை 17ல் 'சண்டே டைம்ஸ்' பத்திரி

(6ம் பக்கம் பார்க்க)

…அம்பிட்டிகந்த

## …திலாளர் வேலை நிறுத்தம்

நிர்வாகம் இதுவரை தொழிலாளருக்கு பதில் தரவில்லை. அதற்கு மாறாக பொலிசாரை தோட்டத்துக்கு அழைத்து தொழிலாளரை மிரட்டியது அதன்பின் தொழிற்சங்கக் கிளைத் தலைவர்களை பொலிசுக்கு அழைத்துப் பயமுறுத்தியது. இ.தொ.கா, சீ.என்.டவ்.சீ தலைவர்கள் மூலம் போராட்டத்தை முறியடிப்பதிலும் நிர்வாகம் இறங்கியது, தொழில் நீதிமன்றம், தொழிற்சங்கத் தலைமைகள், நிர்வாகிகள் எடுத்த நடவடிக்கை நியாயமானது என அறிவிக்கப்பட்டது, பெப்ரவரி 18ம் திகதி பதுளை தொழில் நீதிமன்றத்தில் விசாரணை நடத்த அவர்கள் இணங்கினார்கள். தொழிலாளரின் கோரிக்கைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த எதுவித திட்டமும் இல்லாமல் பழைய பக்டரியை அகற்றியது சம்பந்தமாக தீர்ப்புவழங்குமாறுகேட்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது,

செல்லச்சாமியும், தொண்டமானும் தமது முழுப்பலத்தையும் அனுபவத்தையும் உபயோகித்து போராட்டத்தை முறியடிக்க எத்தனித்தனர். செல்லச்சாமி இரண்டு முறை அம்பிட்டிகந்த சென்று பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையை தீர்க்கும்வரை போராட்டத்தை நிறுத்துமாறு தொழிலாளருக்கு ஆலோசனை கூறியுள்ளார். தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் வேலைத்திட்டமில்லாத நிலையிலும் சந்தேகத்திற்கு இடையிலும் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை எதிர்பார்த்து போராட்டம் நிறுத்தப்பட்டது. பெப்ரவரி 23ம் திகதி கிளைத் தலைவர்களை கொழும்புக்கு அழைத்த செல்லச்சாமியும் தொண்டமானும் அவர்களுக்கு 'புத்திமதி கூறியுள்ளார்கள். இத் தலைமைகளும் நிர்வாகிகளும் ஏனைய சுற்றுப்புற தோட்டத் தொழிலாளர்கள் அம்பிட்டிகந்த போராட்டத்தில் இணையும் சாத்தியமுள்ளதென பீதிகொண்டுள்ளனர்.

மீறியவத்த, கிரேக், லியங்கவெல, கொஸ்வத்த மற்றும் அம்பிட்டிகந்த போன்ற

(6ம் பக்கம் பார்க்க)

## வட்டவளை இங்ஸ் காமன்ட்ஸ்

### ''24 மணித்தியால வேலைக்கு 8 மணித்தியால சம்பளம்''

யூ. என். பி, அரசாங்கம் ஆரம்பித்த 200 ஆடைத் தொழிற்சாலை வேலைத் திட்டத்தின் கீழ் தோட்டங்களிலும் கிராமப் புறங்களிலும் மோசமான சுரண்டல் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. தோட்டங்களுக்கு சமீபமாக உள்ள பக்டரிகளில் தொழிலாளர்கள் படுமோசமான மிலேச்ச நிலைமைகளின் கீழ் வேலை வாங்கப்படுகின்றார்கள்.

வட்டவளை கிங்ஸ் காமன்ட்ஸ் பக்டரியைச் சேர்ந்த இளம் பெண் தொழிலாளி ''தொழிலாளர் பாதை'' நிருபரிடம் தாம் முகம் கொடுத்துள்ள சுரண்டல் நிலைமைகளை விபரிக்கையில் பின்வருமாறு கூறினார்:

''சில நேரங்களில் நாம் 24 மணித்தியாலங்கள் வேலை செய்ய நேரிடுகின்றது. நான் நேற்றுக் காலை 8 மணிக்கு வந்து இன்று காலை 8 மணிக்கு தான் வேலை முடிந்து செல்கிறேன். ஆனால் எமக்கு சம்பளம் 8 மணித்தியாலத்துக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. மாதச் சம்பளம் ரூபா 1650/- சில வேளைகளில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலை செய்கின்றோம். ஆனால் சம்பளம் கிடைப்பதில்லை.

''பக்டரி தொடங்கி 2 வருடமாகின்றது. நான் அந்த நாட்களில் இருந்து வேலை செய்கின்றேன. அக் காலத்தில் இருந்தவர்களில் பலர் இருக்க முடியாததால் இங்கிருந்து வெளியேறிவிட்டனர். புதிதாகச் சேர்பவர்கள் பக்டரிக்கு ரூபா 2000/- கட்டிச் சேரவேண்டும், அடுத்து வரும் மூன்று மாதம் பயிற்சிக் காலமாக அழைக்கப்படுகின்றது, மூன்று மாதங்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும். இறுதியில் தரவேண்டிய சம்பளத்தை மாதக் கடைசியில் போராடிப் பெறவேண்டும்,

''சம்பளம் தருவதை தட்டிக் கழிக்கும் பொருட்டு பக்டரி நிர்வாகம் ''எமக்கு கோட்டா இல்லை. எமக்கு சந்தை இல்லை, சரியான நஷ்டம்'' என்றெல்லாம் கூறுகின்றார்கள்,

''இப் பிரச்சினையைப் பற்றி நாம் சந்திரசேகரனுக்கு எழுதினோம். ஆனால் பதில்கூடக் கிடைக்கவில்லை, எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்றார்.

தோட்டப்புறத்தில் மூன்று இலட்சம் வேலை இல்லாத இளைஞர்கள், யுவதிகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. வேலையில்லாத தொழிலாளர்கள் பல இலட்சம் பேர் உள்ளனர். எதிர்காலத்தில் என்றாலும் தொழில் ஊர்ஜிதம் செய்யப்படும் என்ற எதிர்பார்ப்புடன் சம்பளம் இல்லாமலும் சரி இளைஞர்களும் யுவதிகளும் ஆடைத் தொழிற்சாலைகளுக்குச் செல்கின்றார்கள், உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தோட்டத்துறையை இலாபகரமான உழைப்பை கொள்ளையடிக்கும் ஒரு இடமாக குறித்துக் கொண்டுள்ளனர்.

### திகதி மாற்றம்

2ம் 7ம் பக்கங்களில் திகதியை மார்ச் 17 என திருத்தி வாசிக்கவும் ஆ......ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டப்புற வேலைநீக்கம், அரசபயங்கரம், இனவாத...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு வரைந்த கட்டுரையில் இலங்கையில் சீடீசீ உற்பத்திமுறை மூன்று வீதமே இடம்பெறுவதாகவும் இலங்கை தேயிலையுடன் கலப்பதற்கு அவசியமான அந்த தேயிலை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாயும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை முதலாளிகள் இன்று துடிப்பது எதற்கு? இந்த சீடீசீ சந்தையில் இருந்து இலாபம் சுறக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளை இலங்கைக்கு தருவிப்பதன் மூலம் எலும்பு நக்கலாம் என இவர்கள் எண்ணுகின்றார்கள்.

## விலை வீழ்ச்சி

இதற்கிடையே உலகச் சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலைமையில் உற்பத்திச் செலவுகளை வெட்டிக் குறைக்கும் திட்டங்களைப் பற்றி முதலாளிகள் கவனம் செலுத்தி வருகின்றார்கள். இந்த விலை வீழ்ச்சியைப் பற்றி கலாநிதி காமினி கொரியா குறிப்பிடுகையில் ''பொதுவில் பார்ப்பின் தேயிலை விலை 1930பதுகளின் பொருளாதார வீழ்ச்சியின்போது இருந்ததைக் காட்டிலும் கீழ் மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த விலை வீழ்ச்சி 1980பதுகளில் ஆரம்பமாகியது. இந்த வீழ்ச்சி பொருட்களின விலை பற்றிய வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வீழ்ச்சியைக் காட்டிலும் நீண்டு செல்கிறது.'' என்றுள்ளார்.

உற்பத்தியின் சகல துறைகளிலும் கைபோட்டுக் கொண்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இலாபத்தை உத்தரவாதம் செய்து கொள்ளும் ஒரு நிலைமையில் தேயிலை உற்பத்தியில் ஊடுருவிக் கொள்ளும் மறுசீரமைப்பு என்ற பேரில் தோட்டத்துறையை தனியார் மயப்படுத்தும்படி உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் அரசாங்கத்தை நெருக்குவதற்கு காரணம் இதற்கான வாய்ப்பை உண்டுபண்ணுவதற்கேயாகும். இறப்பர், தெங்கு கைத்தொழில்களும் உலக சந்தையின் நெருக்கடியாலும் முதலாளித்துவக் கம்பனிகளின் சுரண்டல்களாலும் அழிவின் விளிம்பில் நின்று கொண்டுள்ளன. அவற்றில் தொழில் புரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் 'தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் அழிவுக்கே முகம் கொடுத்துள்ளனர்.

இலங்கையில் தேயிலைக் கைத்தொழில் எந்தளவு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்பதை அவை உற்பத்தி செய்யப்படும் நிலங்கள் இலாபகரமான வேறு விளை பொருட்களின் உற்பத்திக்கென பங்கிட்டு வழங்க முதலாளித்துவ அரசாங்கமும் தோட்டங்களை கையேற்ற கம்பனிகளும் நடவடிக்கை எடுத்து வருவதைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். இவை தொழிலாளர்களை விரட்டியடிக்க முயற்சித்து வருகின்றன.

பொதுஜன முன்னணி அரசாங்கம் கம்பனிகளிடம் தோட்டங்களை ஒப்படைத்துவிட்டு தொழிலாளர்களின் மேல் அழிவின் சுமைகளைக் கட்டியடிக்க நானாவித சூழ்ச்சிகளைக் கையாள்கின்றது, தொழிற் சங்க ஏஜன்டுகள், அரச ஒடுக்கு முறைகள், இனவாத ஆத்திரமூட்டல்கள் என்பன இதற்காகத் தயார் செய்யப்படுகின்றன.

## அரசின் ஆத்திரமூட்டல்கள்

தோட்டத் தொழிலாளருக்கு எதிராக இன்று நாடு பூராவும் உள்ள தோட்டங்களில் இடம் பெற்றுவரும் அரசினதும் குண்டர்களதும் ஒடுக்குமுறைகள் இந்த இலக்கிலேயே இடம் பெற்று வருகின்றன. தோட்ட நிர்வாகிகளைக் கொண்டு ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு தோட்டத் தொழிலாளர்கள் வன்முறை நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என முதலாளித்துவ ஊதுகுழல்களைக் கொண்டு பிரச்சாரம் செய்து, அரச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதே இத்திட்டம். இது ஏற்கனவே பல தோட்டங்களில் ஆரம்பமாகி உள்ளது. சிங்கள ஏழை கிராமவாசிகளை தோட்டக் காணிகளில் குடியேறும்படி தூண்டும் நடவடிக்கைகளில் பொதுஜன முன்னணி ஆதரவாளர்கள் ஈடுபடும் சம்பளங்கள் பற்றிய செய்திகள் தினமும் வந்து கொண்டுள்ளன. இவை இனவாதத்தினைத் தூண்டிவிடுவதற்கான நனவான நடவடிக்கைகள் ஆகும்.

சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணியையும் அரசாங்கத்தின் எடுபிடிகளாக வைத்திருப்பதன் நோக்கம் முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தப் பிற்போக்குத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கே. தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலை முன்னெடுப்பது இவர்களின் முக்கிய கடமையாக உள்ளது. வரவு செலவுத் திட்டப் பேச்சுக்கு முன்னதாக தொண்டமான் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநயாக்காவை சந்தித்து உரையாடியபோதிலும் அப்பேச்சுவார்த்தைகளின் விபரம் அம்பலப்படுத்தப்படவில்லை. எனினும் அரசாங்கத்தின் தோட்டத்துறை தனியார் மயமாக்கத்தின போது தோட்டத் தொழிலாளர்களிடம் இருந்து எந்த விதமான எதிர்ப்பும் தலைநீட்ட இடம் கொடுக்காமல் செயற்படுவது எப்படி என்பதே இவர்களின பேச்சுவார்த்தையின மையப் பொருளாக இடம்பெற்றிருக்க வேண்டும். கடந்த 17 ஆண்டுகளாக யூ.என்.பி. அரசாங்கத்தின் அலுகோசுவாக செயற்பட்டு தோட்டத் தொழிலாளர்களை பலிகொடுத்து வந்த தொண்டமானின் அடுத்த சுற்றுப் பணி ஆரம்பமாகியுள்ளது.

சிறிது காலத்துக்கு முன்னர் இ.தொ.கா.வில் இருந்து பிரிந்து மலையக மக்கள் முன்னணியை அமைத்துக் கொண்ட சந்திரசேகரன் தொண்டமானுடன் அமைச்சரவையில் குந்திக் கொண்டுள்ளார். தொண்டமானின் காட்டிக்கொடுப்புக்கள் உக்கிரமானபோது இ.தொ.கா.வில் இருந்து வெளியேறிய 'மாற்று' தலைமையை கட்டி எழுப்பும் மோசடியில் ஈடுபட்டார். ஆனால் இன்று தனியார்மயமாக்கம் போன்ற முதலாளி வர்க்கத் திட்டங்களில் இ.தொ.காவும் 'மாற்று'' மலையக மக்கள் முன்னணியும் ஒரே மரணப் பொறியாக செயற்படுகின்றன. சமசமாஜ - கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ தலைவர்கள்

## போராட்டப் பாதை

இந்தப் பிற்போக்குத் திட்டங்களை எதிர்த்துப் போராடுவது எப்படி? இதற்கு புதிய முன்நோக்கும் வேலைத்திட்டமும் தலைமையும் அவசியம். தோட்டத்தனியார் மயமாக்கம் நாடு பூராவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்கு எதிரான தாக்குதலின் ஒரு பாகமாகும். மின்சார சபை ரெலிகொம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வங்கிகள் என்பன தனியார் மயமாக்கும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. ''பொருளாதாரத்தினை பூகோளமயத்துடன் இணைக்கவே'' தோட்டத் தனியார் மயமாக்கம் இடம் பெறுவதாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஹில்டன் ஹோட்டலில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீ

எதிர்பார்க்க முடியுமா? இல்லை, அல்லது தனியார் மய எதிர்ப்புப் போராட்டத்தை தன்னும் அவற்றிடம் எதிர்பார்க்க முடியுமா? இல்லை. ஏனைய வேலைத்தல சங்கங்களைப் போலவே தோட்டத்துறை தொழிற் சங்கங்களும் அரசாங்கத்தினதும் முதலாளிகளதும் ஆயுதமாகியுள்ளன. இன்று சீர்திருத்தம் வெற்றி கொள்ளும் வாய்ப்பு கிடையாது. சகல தோட்டங்களிலும் மேற்சொன்ன சோசலிச வேலைத் திட்டத்தை நடைமுறைக்கிடும் நடவடிக்கைக் குழுக்களை கட்டி எழுப்புங்கள்! அதில் அக்கம் பக்கத்தில் உள்ள ஒடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!

இனவாத ஆத்திரமூட்டல் போர்வழிகளுக்கு எதிராக



பொதுஜன முன்னணி அரசாங்க குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்கான ரத்தோட்ட ஓபங்கலை பிரே தோட்டத் தொழிலாளர்கள்

மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களுடன் சேர்ந்து அமைத்துக்கொண்ட தொழிற்சங்க கூட்டு முன்னணி சந்திரிகா பண்டாரநாயக்காவின் மற்றுமோர் அலுகோசாக தொழிற்படுகின்றது. இவர்களின் கோரிக்கை என்ன தெரியுமா? வளங்கள் இல்லாத பலவீனமான இலங்கை முதலாளித்துவ கம்பனிகளிடம் தோட்டங்களை கையளிக்காமல் உலகளாவிய ரெண்டர் கோருவதன்' மூலம் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு தோட்டத்துறையை கையளிக்கும்படி இம் முன்னணி யூ.என்.பி. அரசாங்கத்தை கேட்டிருந்தது. இன்று உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு சந்திரிகா பண்டாரநாயக்கா அழைப்பு விடுத்துள்ள நிலைமையில் அதற்கு முன்கூட்டியே ஆதரவு வழங்கியோர் இவர்களே.

இந் நிலைமையில் தோட்டங்களின் 'லயன்' அறைகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் அமைத்தல் புதிய பல நலன்புரி திட்டங்களை வழங்குதல் போன்ற பொய் பிரச்சாரங்களில் ஈடுபட்டுவரும் தோட்டத்துறை பிரதி அமைச்சரும், சமசமாஜ கட்சி பா.உ.மான அத்தாவுட செனவிரத்னவின் மோசடிகளுக்கு தொழிலாளர் ஏமாந்து போய் விடக் கூடாது.

ட்டாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் கூறியுள்ளார். இது தொழிலாளர்கள் அனைத்துலக சுரண்டல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது.

அனைத்துலக மூலதனத்தின் மிலேச்ச சுரண்டல் திட்டங்களுக்கும் அதன் தேசிய ஏஜன்டுகளுக்கும் எதிராக தோட்டத் தொழிலாளர்கள் முழு நாட்டினதும் தொழிலாளர்களுடனும் அனைத்துலகத் தொழிலாளர்களுடனும் இணைந்து போராடுவதன் அவசியம் தீர்க்கமானதாகியுள்ளது. தலைவர்கள் அரச நிறுவனங்களை அரசாங்கத்தின் கைகளில் வைத்திருக்கும்படி கோருகிறார்கள். இது சாத்தியமானது அல்ல. அத்தோடு இதுகாறும் இந்த முதலாளித்துவ அரசாங்கத்தின் நிறுவனங்களின் கீழ் இருந்த தொழிலாளர்களுக்கு நேரிட்டது என்ன? ஆதலால் தோட்டங்களையும் ஏனைய அரச நிறுவனங்களையும் தனியார் மயமாக்கத்துக்கு எதிராக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ்கொணர வேண்டும்.

தோட்டத் தொழிற் சங்கங்களிடம் இருந்து இத்தகைய ஒரு வேலைத் திட்டத்தினை

ஒடுக்கப்படும மக்களின் ஆதரவை வெல்லவும் அவர்களின் கோரிக்கைகளுக்கு தலைமை தாங்குதவன் மூலமும் அவர்களின் தலைமையை வென்றெடுக்க நடவடிக்கைக் குழுக்கள் வாய்ப்பளிக்கும். தொழிற்சங்க பிளவுகளின் எல்லைகளைத் தாண்டி தொழிலாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் சகல தாக்குதல்களுக்கும் எதிராக தொழிலாளர்களை போராட்டத்தில் இணைக்க நடவடிக்கை குழு நடவடிக்கை எடுக்க முடியும். 1940 பதுகளில் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் பலம் வாய்ந்த பிரிவினராக அன்று அவர்கள் சுயாதீன தொழிலாள வர்க்க அரசியல் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணி திரண்டதே காரணம், அன்று இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியும் அதன் இலங்கை அலகான லங்கா சமசமாஜக் கட்சியும் அந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தன. இன்று இந்த தலைமை படுமோசமான வலதுசாரி திசையில் பயணம் செய்கின்றது. ஆனால் இன்று தொழிலாளர் முகம் கொடுத்துள்ள சவாலுக்கு சுயாதீன அரசியல் வேலைத் திட்டத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# "சமாதான ரயில்" பயணமும் "வெண்புறாவே விரைந்து வா" கோஷங்களும்

"சமாதான ரயிலில்" "வெண்புறாவே விரைந்து வா" கோஷங்களுடன் யாழ்ப்பாணம் சென்று மீண்டு வந்து, சமசமாஜக் கட்சி தலைமை அலுவலகத்தில் "யாழ்ப்பாணச் செய்தி" என்ற தலைப்பில் பெரும் பிரச்சாரத்துடன் சொற்பொழிவு நிகழ்த்திய இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்காரவின் "சமாதான முயற்சிகள்" ஏகாதிபத்திய வாதிகளதும் இலங்கை இனவாத ஒடுக்குமுறை அரசினதும் நலன்களில் இருந்து சுயாதீனமானவை என எவரும் தவறாக எடைபோட்டு விடக் கூடாது என நாம் மீண்டும் எச்சரிக்கின்றோம்.

கடந்த அக்டோபர் முற்பகுதியில் 'யுத்த எதிர்ப்பு பொதுஜன ஒன்றியம்' எனப்படுவதன் பேரால் நுகேகொடையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் பற்றிய ஒரு அரசியல் ஆய்வில் நாம் சுட்டிக் காட்டியவை இந்த 'சமாதான ரயில்' பயணம் சம்பந்தமாயும் பெரிதும் ஏற்புடையவை: "சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமரசம் காணப் போவதாகக் கூறி இடம்பெற்றுவரும் வேலைத் திட்டமே இந்த யுத்த எதிர்ப்பு பொதுஜன ஒன்றியத்தினால் 'யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்கும்' இயக்கமாகச் சாயந்தீட்டப்பட்டுள்ளது." (தொழிலாளர் பாதை 1994 அக்டோபர் 28)

கொழும்பிலும் இன்னும் பல நகரங்களிலும் இடம்பெற்ற இந்த 'யுத்த எதிர்ப்பினை' யாழ்ப்பாணத்தின் காலடிக்கு இன்று எடுத்துச் சென்றவர்களின் அரசியல், பொருளாதார பின்னணியை விபரிக்கையில் நாம் அதே இதழில் பின்வருமாறும் சுட்டிக்காட்டி இருந்தோம்: "... யுத்த எதிர்ப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர்கள் காவடி எடுக்கும் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளத் துடிக்கும் சமரசத்தின் பின்னணியில் உள்ளதும் இதே பொருளாதாரக் காரணிகளே.... இலங்கையின் சிங்கள முதலாளி வர்க்கம் ஒரு ஏகாதிபத்திய சக்தியோ அல்லது வல்லரசோ அல்ல. எனினும் ஏனைய சகல பின்தங்கிய நாடுகளதும் முதலாளிகளுடனும் போட்டி போட்டு முதலீடுகளைத் தருவிப்பதிலும் ஏகாதிபத்தியவாதிகளது பாதங்களை வருடுவதிலும் இவர்கள் சோடை போனவர்கள் அல்லர். இலங்கையின் ஆளும் வர்க்கம் - முக்கிய அரசியல் ஸ்திரப்பாடற்ற ஒரு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இதனால் அவர்கள் எதிர்பார்த்த விதத்தில் வெளிநாட்டு முதலீடுகள் வந்திறங்குவதாய் இல்லை. இலாபகரமான உழைப்புச் சுரண்டலுக்கு வாய்ப்பான நிலைமைகளுடன் கூடிய அரசியல் உறுதிப்பாட்டை அல்லது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை இரும்புச் சப்பாத்துகளால் ஏறி உழக்கும் சுரண்டலுக்கான நிலைமைகளை ஏகாதிபத்தியவாதிகள் வேண்டி நிற்கிறார்கள்."

இந்த அம்சம் தென் இலங்கைக்கு மட்டும் அல்ல வடக்கு-கிழக்கு தமிழ் முதலாளி வர்க்கத்தின் விடுதலைப் புலிகள் தலைமையைப் பொறுத்தமட்டிலும் பொருந்துவது என நாம் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்: "விடுதலைப் புலிகள் அமைப்புடன் செய்து கொள்ளும் சமரசத்தின் மூலம் இராணுவத்தை தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கட்ட விழ்த்து விடும் அதே வேளையில் தென்மாகாணங்களில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளுவதற்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலையை ஏகாதிபத்தியவாதிகள் வேண்டிநிற்கின்றனர்."

"வாசுவின் யாழ் விஜயம் சொந்த நலனைக் கொண்டது" என வருணித்த பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் "இனக்குழு பிரச்சினை"யைத் தீர்க்கும் சாட்டில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை வாஷிங்டனில் வேண்டி நின்ற சக்திகளது ஒரு பாகமாகவே நாணயக்காரவின் "சமாதான முயற்சிகள்" இடம்பெற்றன என்பதை நாம் நினைவில் கொண்டாக வேண்டும். சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கொள்கைக்கு புறம்பாகத் தமக்கு மாறுபட்ட கொள்கையே கிடையாது என திரும்பத் திரும்ப ஊர்ஜிதம் செய்து கொண்டுள்ளதையும் எந்தவொரு தொழிலாளியும் ஒடுக்கப்படுவோரும் மனங் கொண்டாக வேண்டும்.

வாஷிங்டனில் அமெரிக்க இராஜாங்க செயலாளரையும் வர்த்தகச் செயலாளரையும் சந்தித்ததன் பின்னர் "தேசிய செய்தி சமூகத்தினால்" ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் பேசிய வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொணர கிளின்டன் அரசாங்கத்தைத் தலையிடுமாறு வேண்டினார்:

"குறைந்த பட்சம் சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுவார்த்தை மேசையில் உட்கார்ந்து கொள்வது நல்லது எனக் கூறும் அளவிலான ஒரு ஒத்துழைப்பு அறிக்கையை தன்னும் வெளியிட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

'அமெரிக்காவின் குரல்' (VOA) வேலைகளை மீண்டும் இரணவிலவில் ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கையுமாக சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கம் வெளிநாட்டு அமைச்சரை .வாஷிங்டனுக்கு அனுப்பியது. இந்த 'அமெரிக்காவின் குரல்' உடன்படிக்கை இப்பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்குள் இலங்கையையும் உள்ளடக்கிக் கொள்ளும் ஒரு உடன்படிக்கையாகும். இதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இந்திய நரசிம்மராவ் அரசாங்கத்துடன் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். இதன் மூலம் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இராணுவ நடவடிக்கைக்கான உறவுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க முதலீடுகளைத் தருவிக்கவும் அரசியல், இராணுவ உதவிகளைப் பெறவும் எந்தவொரு கைக்கூலியாகவும் கடமைபுரிய தயார் என்பதை பொதுஜன முன்னணி அரசாங்கம் காட்டிக் கொண்டுள்ள ஒரு நிலையில் "சமாதானம்" 'ஜனநாயகம்' கோஷங்களுடன் இடம்பெறும் இத்தகைய யாத்திரைகளும் பவனிகளும் சுயாதீனமான அரசியல் வேலைத்திட்டம், முன்நோக்கு சம்பந்தமாகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே இருந்து வரும் குழப்பங்களை மேலும் உக்கிரமடையச் செய்வதாகும். அத்தோடு இப் பிராந்தியத்தில் உக்கிரம் கண்டுள்ள ஏகாதிபத்திய தலையீடுகளை இவை பூசி மெழுகவும் செய்கின்றன.

தெற்கிலும், வடக்கிலும் இடம்பெறும் இந்த 'சமாதானம்', 'ஜனநாயகம்' 'அபிவிருத்தி'க்கான கோஷங்களின் பின்னணியில் உள்ள மத்தியதர வர்க்க புத்திஜீவிகளும் மக்களைக் குழப்பியடிப்பதில் முன்னணியில் நிற்கின்றனர். அக்டோபர் இதழில் நாம் சுட்டிக்காட்டியது போல் "முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கும் புதிய சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்புவதற்கும் இலாயக்கான ஒரே புரட்சிகர சக்தி தொழிலாளர் வர்க்கம் என்பதை நிராகரிப்பதில் இருந்தே இந்த புத்திஜீவிகளின் தொழில் ஆரம்பமாகின்றது. வடக்கு-கிழக்கில் யுத்தத்தினை நிறுத்துவதும் தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இனவாத அடக்கு முறைகளை ஒழித்துக் கட்டுவதும் இருபுறத்திலும் உள்ள தொழிலாளர் வர்க்கம் அனைத்துலக ஐக்கியத்தினை ஊர்ஜிதம் செய்வதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்."

இது நவசமசமாஜக் கட்சியின் தலைமையில் இருந்து துரோக பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாத அரசியலின் உச்சக் கட்டமாக பாராளுமன்ற ஆசனங்களுக்காக சமசமாஜக் கட்சிக்கு மீண்டும் தாவிய வாசுதேவ நாணயக்காரவை உள்ளடக்கிய முதலாளிகள், குட்டி முதலாளிகளின் பணி அல்ல. மாறாக ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை (தமிழ் ஈழம்-இலங்கை சோசலிச குடியரசு) அமைக்கப் போராடுவதன் மூலம் மட்டுமே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

# பத்திரிகையாளர்கள் மீதான அரச காடைத்தனங்களைக் கண்டனம் செய்!

'த சன்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவும் அதன் எழுத்தாளரான ரேன் விக்கிரமதுங்கவும் பெப்ரவரி 7ம் திகதி குண்டர்களால் தாக்கப் பட்டதையும் 'ராவய' பத்திரிகையாளரான நந்தன வீரரத்னவுக்கு எதிரான அரச குண்டர்களின் மிரட்டல்களையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதையும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றன.

இவ்விரு முதலாளித்துவப் பத்திரிகைகளுடனும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் தொழிலாளர் பாதைக்கும் பொதுவானவை எதுவும் கிடையாது. இருப்பினும் இந்த குண்டர் தாக்குதலும் அரச இயந்திரத்தின் மிரட்டல்களும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளைத் தாக்கும் பொருட்டு பொதுஜன முன்னணி முதலாளித்துவ அரசாங்கத்தினாலும் முதலாளி வர்க்கத்தினாலும் உக்கிரமாக்கப்பட்டுள்ளதாக நாம் கருதுகின்றோம்.

கடந்த சில மாதங்களாக பல்வேறு பத்திரிகை களையும் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு எதிராக அரசினதும் காடையர்களதும் மிரட்டல்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த 17 ஆண்டுக் கால யூ.என்.பி. ஆட்சியில் பத்திரிகைகளுக்கும் பத்திரிகைத் துறையைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கும் எதிராக அரசினதும் குண்டர்களதும் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுவது விளங்கியது. ரிச்சார்ட் டீ சொயிசா என்ற பத்திரிகையாளரைத் துடிக்கத் துடிக்க கொன்று தள்ள பிரேமதாச அரசாங்கம் கொலைகார கும்பலை ஏவிவிட்டமை குறிப்பிடத் தக்கது. 1970-77 ஆண்டுகால முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தைக் காக்கும் பொருட்டு இடம்பெற்ற ஒடுக்கு முறையின் போது பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப் பட்டது. 1971 ஏப்ரல் கிளர்ச்சியுடன் கூட்டரசாங்கத்தையும், அரச ஒடுக்கு முறையையும் எதிர்த்தமைக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல பத்திரிகைகளும் தடைசெய்யப் பட்டன.

யூ.என்.பி. அரசாங்கம் ஜனநாயக உரிமைகள் மீது தொடுத்த தாக்குதலை எதிர்த்த பத்திரிகையாளர்களும் அவர்களின் அமைப்புக்களும் முதலாளித்துவ பொதுஜன முன்னணி பக்கம் திரும்பின. நெருக்கடிக்குள்ளான முதலாளித்துவ அமைப்பினுள் ஜனநாயக உரிமைகளும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியும் இணைந்து போக முடியாது என்பதை இன்று அவர்கள் முகம் கொடுக்கும் அரச பயங்கரவாத மிரட்டல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தற்போதைய குண்டர் தாக்குதல்கள், அரச மிரட்டல்கள் பற்றிய அரசாங்கத்தின் கண்டனங்களும் அவைபற்றிய பிரேரணைகளும் முற்று முழுதான மோசடிகளாகும். இவற்றில் நம்பிக்கை வைப்பதும் அத்தகையதே. 'ஒழுக்க சீலர்' அல்லாத பத்திரிகைகள் பத்திரிகையாளர்கள், பத்திரிகை கடிதங்கள் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி ஆராய அரசாங்கம் பெப்ரவரி நடுப் பகுதியில் ஒரு அமைச்சரவை கமிட்டியையும் நியமனம் செய்துள்ளது. ஒழுக்க சீலம் கொண்டவை எவை? அங்ஙனம் இல்லாதவை எவை? என்பதை தீர்மானம் செய்ய பொதுஜன முன்னணி அரசாங்கம் தயாராகி வருகின்றது.

ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் இந்த தாக்குதல்களையிட்டுத் தொழிலாளர் வர்க்கம் தனது கவனத்தை செலுத்தியாக வேண்டும். அத்தாக்குதல்களுக்கு எதிராக செயற்பட வேண்டும். இத்தாக்குதல்கள் உண்மையில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தயார் செய்யப்பட்டு வரும் சர்வாதிகார ஆட்சியின் ஆரம்ப அறிகுறிகளாகும்.




வாசியுங்கள்!

இலங்கையின் மார்க்சிசப் போராட்ட வரலாறு

விலை: 22/-

தொடர்பு: ஆனந்த வக்கும்புர
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுஜன முன்னணி வரவு செலவுத் திட்டம்

# தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு படுகொடூரமான அடி

பெப்ரவரி 8ல் பொதுஜன முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் தேர்தல் பிரச்சார காலத்தின் வாக்குறுதிகளின் நிழலைத் தன்னும் நெருங்கவில்லை. பிரதி நிதிஅமைச்சரும் அரசியல் அமைப்புச் சட்ட அமைச்சருமான ஜீ எல்.பீரிசினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம் ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத் தாபனங்களின் சுரண்டலுக்கு மேலும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது.

தனியார் மயமாக்கம்: அரசாங்க துறை நிறுவனங்கள் அனைத்தையும் கலைத்து தனியார் மயமாக்கத்தினை முழு அளவில் அமுலுக்கு கொணர்வதன் மூலம் தொழில், வாழ்க்கைத் தரங்களுக்கு தாக்குதல் தொடுக்க பொதுஜன முன்னணி அரசாங்க வரவு செலவுத் திட்டம் பிரேரித்துக் கொண்டுள்ளது. இதில் தோட்டத்துறை தனியார் மயமாக்கம் முக்கிய அங்கமாக உள்ளது, டெலிகொம், மின்சார சபை, காப்புறுதிக் கூட்டத்தாபனம் என்பன தனியார் மயமாக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள ஏனைய அரச நிறுவனங்களில் சிலவாகும். தேசிய அபிவிருத்தி (என்.டீ.பீ.) வங்கி, லங்கா செரமிக், பெலவத்த சீனி, இலங்கை வர்த்தக வங்கி, போகல சுரங்கம், இலங்கை ஹொட்டல் கூட்டுத்தாபனம் என்பவற்றில் அரசாங்கம் கொண்டுள்ள பங்குகளை விற்றுத் தள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது,

இந்த விதத்திலான தனியார்மயத்தின் மூலம் பங்குகளை விற்றுத் தள்ளியென்றாலும் அரசாங்க வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையை அடைக்க ரூபா. 1300 கோடி திரட்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெப்ரவரி 13ம் திகதி ஹில்டன் ஹோட்டலில முதலீட்டாளர்கள் மத்தியில் பேசிய சந்திரிக்கா குமாரதுங்க தோட்ட முகாமையைப் பொறுப்பேற்க உள்நாட்டு, வெளிநாட்டு கம்பனிகளுக்கு அழைப்பு விடுத்தார். ''தனியார் மயத்தினை நாம் நோக்குவது நிதி சேகரிக்கும் இலக்கில் மட்டும் அல்ல. உயர்ந்த உற்பத்தியும், இலாபமும் திறமையும் உருவாக்குவதற்கே'' என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உபரி உழைப்பினை சுரண்டும் இந்த இலக்கினை நடைமுறைக்கிடும் பொறுப்பு உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனியார் மயத்தினால் தோட்டத் துறையில் மட்டும் தொழிலாளர் இலட்சக் கணக்கில் வேலைகளில் இருந்து வெளியேற்றப்படுவர். புகையிரத திணைக்களமும் வெகுவிரைவில் இந்த தனியார்மயமாக்க உரலில் கொட்டப்படவுள்ளது. இத் திணைக்களம் வருடாந்தம் 60 கோடி ரூபா நஷ்டமடைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள பிரதி அமைச்சர் புகையிரதத் துறையையும் ''தனியார்துறையின் ஒத்துழைப்புடன் ஊக்குவிப்பதாக'' கூறியுள்ளார்.

நலன்புரி சேவையும் உதவி மானியங்களும்: வேலையற்றோருக்கு வழங்குவதாக பொதுஜன முன்னணி அரசாங்கம் குறிப்பிட்ட ரூபா. 2000/ மாத உதவி நிதி பற்றி மூச்சையே காணோம். பிரதி நிதியமைச்சரின் புள்ளி விபரங்களின் படி இலங்கையின் உழைப்புப் படையில் 14% அல்லது 840,000 பேர் வேலையில்லாமல் உள்ளனர். உண்மையில் நிச எண்ணிக்கை இதைவிட இருமடங்கு அதிகம். வரவு செலவுத் திட்டம் இவர்களுக்கு விடுத்துள்ள செய்தி என்ன? ''துரித அபிவிருத்தி'' மூலம் தொழில் சிருஷ்டிக்கப்படும்வரை காத்திருங்கள்!

பாடசாலைகளில் அமுலில் இருந்துவரும் மதியபோசன மானியம் மே மாதம் வரை தொடரும் என வரவு செலவுத் திட்டம் கூறிக்கொண்டுள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த உதவிநிதி ஒழிக்கப்படும் என சமிக்கை செய்துள்ளது. விவசாயிகளுக்கான பசளை உதவிமானியம் மற்றும்மார் மோசடி நடிப்பாகும். ரூபா. 500/- உதவிமானியத்துடன் விவசாயிகள் ஒரு ஏக்கருக்குத் தன்னும் போடக்கூடிய பசளையை தன்னும் பெற்றுக் கொள்ள முடியாது. மறுபுறத்தில் இந்த பசளையின் விலை ரூபா. 100 —ரூபா.200 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

### விலைவாசி உயர்வு:

வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னதாகவே அரசாங்கம் பெட்ரோல் விலையை அதிகரித்தது. வரவு செலவுத் திட்டத்தினையொட்டி ரூபா மதிப்பிறங்க இடமுண்டு. இவை மறுபுறத்தில் விலைகளின் உயரப் பாய்ச்சலுக்கும் இட்டுச் சென்றுள்ளது. வரவு செலவுத் திட்டத்தினால் தபால் கட்டணங்களை 25%தினால் கூட்டிய அரசாங்கம் வழக்கம் போல் வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னதாகவே சிகரட், குடிவகைகளின் விலைகளையும் அதிகரித்தது.

### போக்குவரத்துக் கட்டணம்

போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிக்கும் விதத்தில் பிராந்திய போக்குவரத்துச் சபைகளும் தனியார் கம்பனிகளும் நியாயமான கட்டணங்களை அறவிட்டுக் கொள்ள இடமளிக்க வேண்டும் எனவும பிரதி நிதியமைச்சர் குறிப்பிட்டார். பஸ் போக்குவரத்தில் கி.மீட்டருக்கு ரூபா. 2/-ம் புகையிரதம் 20 சதமும் நஷ்டம அடைவதாகவும் குறிப்பிடட போக்குவரத்து அமைச்சர் சிறீமணி அத்துலத்முதலி, கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

### யுத்தச்செலவீனம்:

யுத்தத்தினை முடிவுக்கு கொணரும் கதையளப்புக்கனில் 'வெண்புறாவே விரைந்து வா' கோஷங்களை இசைக்கும் அரசாங்கம இதுகாறும் அதிஉயர்ந்த தொகையை—ரூபா. 2700/- கோடி இனவாத யுத்தச் செலவினங்களுக்காக ஒதுக்கிக்கொண்டுள்ளது. இதன் அர்த்தம் என்ன? விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி வடக்கு—கிழக்கிலும் அவ்வாறே தென்மாகாணங்களிலும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ள அரச ஒடுக்குமுறை இயந்திரம் பலப்படுத்தப்படுகின்றது இந்த யுத்த நிதி ஒதுக்கீட்டுடன் இணைந்தபடி இராணுவத்துக்கு புதிதாக 2000 பேரை சேர்க்கும் வேலைகளை இராணுவ உயர் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கிட்டுள்ளனர்.

தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ள பிரமாண்டமான சுமை வெளிநாட்டு, உள்நாட்டு கடன்களை வட்டி குட்டியுடன் கட்டித் தீர்க்கும் செலவாகும். இந்த வட்டி ஓட்டுண்ணிகள் ரூபா. 5600/- கோடிகளை பெறவுள்ளனர். இது தேசிய வருமானத்தின் 12% மும் அரசாங்க வருமானத்தில் 60% ஆகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதலுக்கு முகம்கொடுக்க தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களுக்கு புதிய முன்னோக்கும் வேலைத் திட்டமும், தலைமையும் அவசியம். முதலாளித்துவத்தின் பூகோளமயத்துக்கு எதிராக ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசும் அனைத்துலக சோசலிசத்தினை தொழிலாளர் வர்க்கம் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

### பண்டாரவளை— அம்பிட்டிகந்த...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டங்களின் தேயிலை பக்டரிகளில் நூற்றுக் கணக்கான தொழில்களை நாசப்படுத்திய லியன்கவெல மறுசீரமைப்பு, காரணமாக ஏனைய தோட்டங்களின் சகல தொழிலாளர்களும் இதற்கு சமமான அபாயத்திற்கு முகம் சொடுத்துள்ளனர். சீடீசீ இயத்திரங்களை கொண்டு தேயிலை பதனிடப்படும் இந்த பக்டரியினால் இப் பகுதியைச் சேர்ந்த சகல தோட்டங்களதும் கொழுந்துகளும் அரைக்கப்படுகின்றது. இதன் பெறுபேறாகவே அம்பிட்டிகந்த தோட்டம் டிசம்பர் 25ம் திகதி மூடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


வாசியுங்கள்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் ட்ரொட்ஸ்கிச சஞ்சிகை

மார்க்சிச முன்னோக்கு




தொடர்பு: ஆனந்த வக்கும்புர
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு – 10

வாசியுங்கள்!

சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?

தொடர்புகளுக்கு:- விலை ரூபா. 25-00
ஆனந்த வக்கும்புற,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு—10.

'தொழிலாளர் பாதை'
சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட்பட சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/50 3 மாதம் — ரூபா 25/50
6 மாதம் — ரூபா 51/- 1 வருடம் — ரூபா 102/-

பெயர்:.. ..................................

முகவரி:.......... ..................................

..................................

தொலைபேசி இலக்கம்:-.. ........................

சந்தாக் காலம்:......... ரூபா......... சதம்.........

அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் அனுப்ப

வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-1


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org